بسم الله الرحمن الرحيم

நவம்பர் - டிசம்பர்

# தெளிவு 08

وَمَا عَلَيْنَا إِلَّا الْبَلَاغُ الْمُبِينُ

தெளிவாக எடுத்துச் சொல்வதைத் தவிர
(வேறு எதுவும்) எம்மீது கடமையில்லை.
(36 : 17)

كُلُّ حِزْبٍ بِمَا لَدَيْهِمْ فَرِحُونَ

ஒவ்வொரு கூட்டத்தினரும் தங்களிடம் உள்ளதைக்
கொண்டு சந்தோஷிப்படுகின்றனர்.
(ஸூரத்துர் ரூம் : 31)

எனவே வாசகர்களாகிய நீங்கள்

وَاعْتَصِمُوا بِحَبْلِ اللَّهِ جَمِيعًا وَلَا تَفَرَّقُوا

அல்லாஹ்வின் கயிற்றை அனைவரும் சேர்ந்து
பிடித்துக் கொள்ளுங்கள். பிரிந்து விடாதீர்கள்.
(ஸூரத்துர் ரூம் : 31)

வெளியீடு : ஜமாஅதுல் முஸ்லிமீன்

35/-

# ஆசிரியர் கருத்து

அன்பார்ந்த வாசகர்களே!

இற்றைக்கு 1400 ஆண்டுகளுக்கு முன் இறுதித் தூதர் ந அவர்கள் மூலம், மறுமை நாள் வரை மக்கள் பின்பற்றி வாழ வேண்டிய தூய இஸ்லாம் மார்க்கத்தை, அல் குர்ஆன், அஸ் ஸுன்னா எனும் இரண்டிற்குள்ளும் உள்ளடக்கி அல்லாஹ் இறக்கி வைத்தான்.

இறுதித் தூதர் (ஸல்) அவர்களோ இந்த இரண்டு மூலாதாரங்களையும் வழிகாட்டியாகக் கொண்டு ஒரு இஸ்லாமிய சமுதாயத்தை உருவாக்கி, அதற்குத் தானே தலைமைத் தாங்கி, வழிநடத்தி உலக முடிவு வரை முழு மனித சமதாயத்திற்கும் அதை முன்னுதாரணமாக ஆக்கி விட்டுச் சென்றார்கள்.

அது மட்டுமன்றி நேர்வழி பெற்ற அந்த முஸ்லிம் சமுதாயம், பிற்காலத்தில் வழிதவறி விடாதிருக்க வேண்டும் என்பதற்காக அல் குர்ஆனையும் அஸ் ஸுன்னவையும் கைவிட்டு விடாது இறுகப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்தி விட்டுச் சென்றார்கள்.

இதை செவிமடுத்த ஸஹாபாப் பெருமக்களும் அவர்களைப் பின்பற்றி வாழ்ந்த நன் மக்களும் சுமார் இரண்டு நூற்றாண்டுகள் வரை அல்லாஹ்வின் தூதர் காட்டிய பாதையில் அணுவும் பிசகாது எவ்வித கூட்டல் குறைத்தலுமின்றி தூய இஸ்லாத்தைப் பின்பற்றி வாழ்ந்தார்கள். இதன் காரணமாக உலகம் முழுதும் தீன் ஒளி பெருகி சாரிசாரியாக மக்கள் சத்திய இஸ்லாத்தில் வந்து இணையலானார்கள். உலகத்தில் ஒரு சக்தி வாய்ந்த சமுதாயமாக முஸ்லிம் சமுதாயம் திகழ்ந்தது. பல நாடுகளில் அல் குர்ஆனின் ஆட்சியும் மலர்ந்தது.

இதன் பின்னர் ஒளிமயமான இக்காலம், படிப்படியாக மங்கத் தொடங்கியது. செல்வம் பெருகியதாலும் உலக ஆசைகளும், ஆடம்பரங்களும் மிகைத்ததாலும் சுவர்க்கத்தை நோக்கமாகக் கொண்ட அந்த இஸ்லாமிய சமுதாயம் உலக சுகங்களை நோக்கி நகரத் தொடங்கியது. அது மட்டுமன்றி எவ்வித கட்டுப்பாடுமில்லாமல்

உலகத்தை அனுபவிக்க விரும்பியவர்களுக்கு இஸ்லாம் ஒரு தடையாக இருந்ததால், மார்க்கத்தைப் பின்பற்றுவதற்குப் பதிலாக மனோ இச்சைகளைப் பின்பற்றி மார்க்கக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிய முற்பட்டார்கள். இதன் விளைவாக இஸ்லாத்தின் அடிப்படையான முழு முஸ்லிம்களும் ஒரேத் தலைமைத்துவத்திற்குக் கட்டுப்பட வேண்டுமென்ற தலைமைத்துவக் கோட்பாடு கைவிடப்பட்டது.

இதன் காரணமாக அல்லாஹ்வின் தூதரினால் ஒரே தலைமைத்துவத்தின் கீழ் கட்டுக்கோப்பாக உருவாக்கப்பட்ட முஸ்லிம் சமுதாயம் கருத்து முரண்பாடுடையவர்களினால், பல கொள்கைகள், பல தலைவர்கள், பல ஆட்சிகள், பல பிரிவுகள் என பல கூறுகளாக சிதைக்கப்பட்டது. பொய்யான ஹதீஸ்களும் போலி வரலாறுகளும் படைக்கப்பட்டன. சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் கூறப்பட்ட முக்கிய ஸஹாபாக்களெல்லாம் தீயவர்களாக சித்தரிக்கப்பட்டனர். கடந்த ஆயிரம் வருடங்களுக்கும் மேலாக இச்சீரழிவுகள் நீடித்ததன் காரணமாக தூய்மையான இஸ்லாத்தின் பெயரால் வழிகேடுகளெல்லாம் மார்க்கமாக்கப்பட்டன.

இத்தகைய நிலையில்தான் அல்லாஹ்வின் தூதரும், அவர்களின் தோழர்களும் அன்று பின்பற்றிய அந்தத் தூய்மையான இஸ்லாத்தை மீண்டும் உலகத்தில் நிலை நாட்ட சுவர்க்கம் செல்லும் கூட்டம் என நபி (ஸல்) அவர்களினால் முன்னறிவிப்புச் செய்யப்பட்ட அல் ஜமாஅத் எனும் ஜமாஅத்துல் முஸ்லிமீன் இப்போது உலகத்தில் தோன்றியுள்ளது.

இஸ்லாத்தின் பெயரால் சமூகத்தில் ஊடுருவி நீண்ட காலமாக நிலைபெற்றுவிட்ட வெற்றுச் சடங்குளையும், போலிச் சடங்குகளையும் பித்அத் எனும் நூதனங்களையும், குப்ரான ஷிர்க்கான செயல்களையும் குர்ஆன் ஸுன்னா ஆதாரங்களுடன் இணங்காட்டும் பொழுதும், நீண்ட காலமாக மறைக்கப்பட்டு விட்ட ஸுன்னாக்கள் எனும் வழி முறைகளை அல் குர்ஆனிலிருந்தும், அல் ஹதீதுகளிலிருந்தும் வடித்தெடுத்து மீள நிலைநாட்டும் பொழுதும் ஜமாஅத்துல் முஸ்லிமீனை மக்கள், ஆச்சரியத்துடன் பார்க்கின்றார்கள். இஸ்லாத்தில் இவை இருந்தனவா? என வினாத் தொடுக்கின்றார்கள்.

அதே நேரம் இஸ்லாத்தின் வழிமுறைகளை உரிய முறையில் மக்கள் முன் வைக்காது தாமும் பின் பற்றாது உலக சுகத்தை நோக்கமாகக் கொண்டு வாழும் மார்க்க அறிஞர்கள், சத்தியத்தை எவ்வித தயக்கமும் இன்றி வெளிப்படுத்தும் ஜமாஅதுல் முஸ்லிமீனைப் பற்றி பொய்யான வதந்திகளைப் பரப்புகின்றார்கள். அது கூறும் ஸஹீஹான ஹதீதுகளை ளஈப் (பலயீனமானது) என்கிறார்கள்.

ஆனால் இந்தப் பொய்களையெல்லாம் முறியடித்து ஜமாஅதுல் முஸ்லிமீன் நாலா புறமும் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கின்றது. உலக சுகத்தில் மூழ்கிப் போன பெரும்பாலான மக்கள், சத்தியத்தைத் தேடுவதிலும் அதைப் பின்பற்றுவதிலும் அலட்சியம் காட்டினாலும் தூய்மையான இஸ்லாத்தைப் பின்பற்ற வேண்டும். உண்மை முஸ்லிமாக மரணிக்க வேண்டும் என்ற ஆவலுடன் வாழும் மக்கள், எமது உபதேசங்களைச் செவிமடுத்து சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். தாம் இது வரை பின்பற்றியது தூய இஸ்லாம் அல்ல என்பதை உணரத் தலைப்பட்டு விட்டார்கள். இவர்களில் அல்லாஹ் நாடியவர்கள் சத்தியக் கூட்டமாகிய ஜமாஅதுல் முஸ்லிமீனிலே வந்து இணைந்து தூய இஸ்லாத்தின் சுவையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே அன்புக்குரியவர்களே!

பரிசுத்தமான இஸ்லாம் மார்க்கத்தில் அல்லாஹ்வும் அவனது தூதரும் ஏவியவற்றையும் விலக்கியவற்றையும் தெளிவாகக் கூறுவதுடன் மார்க்கத்தில் இருந்து பின்பு, தீயவர்களால் மறைக்கப்பட்டவற்றையும், மார்க்கத்தில் இல்லாதிருந்து பின்பு தீயவர்களால் மேலதிகமாக சேர்க்கப் பட்டவற்றையும் பற்றி தகுந்த ஆதாரங்களுடன் விபரிக்கும் ‘தெளிவு’ சஞ்சிகையின் எட்டாவது இதழ் இப்போது உங்களை நாடி வந்துள்ளது.

சத்தியத்தை சத்தியமாகக் கூறும் இப்புத்தகத்தை அலட்சியமாகக் கருதாமல் ஆழமாகப் படியுங்கள். இதன் மூலம் உண்மையான தீனை நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள். அத்துடன் ஏதும் பிழைகள், சந்தேகங்கள் இருப்பின் தாமதியாது எம்முடன் நேரடியாகவோ, தொலைப் பேசி மூலமோ தொடர்பு கொள்ளுங்கள் என தயவாக வேண்டி விடை பெறுகின்றேன்.

அன்புடன்
ஆசிரியர்

# கேள்வி – பதில்

கேள்வி 01 : ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமை சந்திக்கும் போதுஸலாம் கூறுவது பர்ழா? அல்லது ஸுன்னத்தா?

பதில் : நபி (ஸல்) அவர்கள் காலத்தில் ஸலாம் கூறுவது கட்டாயக் கடமையாகவும் ஒரு பர்ழாகவும் இருந்தது. ஆனால் பிறகு வந்தவர்கள், அதை ஸுன்னத்தாக மாற்றி விட்டார்கள்.

விரும்பினால் சொல்லலாம். விரும்பினால் விட்டுவிடலாம் என்ற கருத்திற்கு மக்கள் தள்ளப்பட்டு இறுதியாக இந்த கடமையான ஸலாம் என்பது யாசகம் கேட்பவர்களுக்கு மட்டும் சொந்தமான ஒரு வணக்கமாக மாறி விட்டது. ஸலாம் சொன்னால், எம்மை யாசகம் கேட்க வந்திருக்கிறார். என்று மக்கள் நினைத்து விடுவார்களோ என்ற ஒரு அச்சம் மக்கள் மத்தியில் காணப்படுகிறது.

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ஸலாம் கூறுவது, செய்தால் நன்மை. செய்யாவிட்டால் பாவமில்லை என்ற ஸுன்னத் அல்ல. மாறாக, அதை விட்டால் பாவம் ஏற்படக் கூடிய ஒரு கடமையான பர்ழாகும். இது சம்மந்தமாக வந்திருக்கும் ஹதீஸ்களில் இரண்டு ஆதாரங்களைத் தருகின்றோம்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், “ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு செய்ய வேண்டிய கடமைகள் ஐந்து. அதில் ஒன்று அவரை சந்தித்தால், அவருக்கு ஸலாம் கூறு.”
(ஸஹீஹ் முஸ்லிம்)

இதில் ஸலாம் கூறு என்று கட்டளையிட்டுள்ளார்கள். எனவே எப்படி இது ஸுன்னத்தாகும்? இது பர்ழையே காட்டுகிறது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், "ஸலாத்தை பரப்புங்கள் சாந்தியடைவீர்கள்."

(புஹாரி - அதபுல் முப்ரத் அல் அஹாதீதுஸ் ஸஹீஹா. எண் - 1493)

கேள்வி 02 : ஸலாம் கூறுவது தனக்குத் தெரிந்தவர்களுக்கு மட்டுமா? அல்லது தெரியாதவர்களுக்கும் கூற வேண்டுமா?

பதில் : முஸ்லிம்களுக்குள் அறிந்தவர்களும் இருப்பர். அறியாதவர்களும் இருப்பர். எப்படி இருந்தாலும் ஒருவர் முஸ்லிம் என்று தெரிந்து விட்டால், ஸலாம் சொல்வது கட்டாயக் கடமையாகும்.

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம், "இஸ்லாத்தில் மிகச் சிறந்த அம்சம் எது?" என்று வினவ, "அறிந்தவர்களுக்கும், நீ அறியாதவர்களுக்கும் ஸலாம் கூறுவது." என்று கூறினார்கள்.

(புஹாரி - பாடம்: ஈமான், முஸ்லிம்)

கேள்வி 03 : ஸலாம் மூன்று விதமாக கூறலாம் என்று ஹதீஸில் வந்துள்ளது. ஒருவர் எமக்கு ஸலாம் கூறினால், அவர் கூறிய பிரகாரமே கூற வேண்டுமா? அல்லது நாம் கூட்டியும் கூறலாமா?

பதில் : ஒருவர் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினால், நாமும் அதே பிரகாரம் வஅலைக்குமுஸ்ஸலாம் என்று கூறலாம். அல்லது அத்துடன் வரஹ்மதுல்லாஹ் என்று கூட்டியும் சொல்லலாம். ஒருவர் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ் என்று கூறினால், நாமும் அதே பிரகாரம் கூறலாம். அல்லது கூட்டி, வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹி வபராகாதுஹு என்றும் கூறலாம். ஒவ்வொன்றுக்கும் பத்து நன்மைகள் என்று ஹதீஸில் வந்துள்ளது.

அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான் :

“(எவரேனும்) உங்களுக்கு வாழ்த்துக் (ஸலாம்) கூறினால், (அதற்குப் பிரதியாக) அதை விட அழகான வாக்கியத்தைக் கூறுங்கள். அல்லது அதனையே திருப்பிக் கூறுங்கள்.”

(அந் நிஸா: 86)

இந்தக் குர்ஆனிய வசனம், ஒருவர் ஸலாம் கூறினால், அதையே கூறலாம் அல்லது கூட்டியும் கூறலாம் என்பதை தெளிவு படுத்துகின்றது.

கேள்வி 04 : ஒருவர் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு என்று முழுமையாகவே ஸலாம் கூறிவிட்டால், அல் குர்ஆனின் 04:86 வசனத்தின்படி அதை விட அழகாக எப்படி கூறுவது?

பதில் : ஒருவர் முழுமையாகவே ஸலாம் கூறிவிட்டால், பதில் சொல்பவர், வபரகாதுஹு என்ற வாசகத்திற்குப் பின் வம.ஃ.பிரதுஹு (அவனின் மன்னிப்பும் கிட்டட்டும்) என்று கூறலாம்.

ஸைத் பின் அர்கம் கூறுகிறார்கள், நபி (ஸல்) அவர்கள், எங்களுக்கு ஸலாம் கூறினால், “வஅலைக்குமுஸ்ஸலாம்

வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு வம.்.பிரதுஹு’’ என்று கூறுவோம்.

(புஹாரி - நூல்: அத்தாரீஹுல் கபீர், அல் அஹாதீதுஸ் ஸஹீஹா, தரம் ஜய்யித். எண் : 1449)

கேள்வி 05 : ஒருவர் உணவு அருந்திக் கொண்டிருக்கும் போது அவருக்கு ஸலாம் கூறுவது மக்ரூஹ் என்ற ஒரு கருத்து மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. இது சரியா?

பதில் : ஒருவர் மலஜலம் கழித்துக் கொண்டிருக்கும் போது மட்டுமே ஸலாம் சொல்லக் கூடாது என்று தடை வந்துள்ளது. உணவு அருந்துபவர்களுக்கு ஸலாம் சொல்லக் கூடாது என்று குர்ஆன், ஸுன்னாவில் தடை வராததால், தாராளமாக சொல்லலாம். மலசல கூடத்தில் இருப்பவருக்கு மட்டுமே ஸலாம் கூறுவதற்கு தடை வந்துள்ளது.

“நபி (ஸல்) அவர்கள் சிறுநீர் கழித்துக் கொண்டிருக்கும் போது ஒரு மனிதர் அவர்களுக்கு ஸலாம் சொல்ல, அதற்கு நபியவர்கள் பதில் கூறவில்லை.”

(திர்மிதி - இது ஸஹீஹ் என்கிறார்.)

மற்றுமொரு அறிவிப்பில்,

“நபி (ஸல்) அவர்கள் சிறுநீர் கழித்துக் கொண்டிருக்கும் போது அவர்கள் அருகில் ஒருவர் நடந்து சென்றார். அப்போது அவர் அவர்களுக்கு ஸலாம் கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், என்னை இந்த நிலையில் கண்டால் எனக்கு ஸலாம் கூறாதே. அப்படி நீ செய்தால், நான் உனக்கு பதில் கூற மாட்டேன். என்று கூறினார்கள்.

(ஸஹீஹ் இப்னுமாஜா, எண்: 282)

கேள்வி 06 : ஸலாம் கூறும் முறை வித்தியாசப்படும் போது நன்மைகளும் வித்தியாசப்படுமா? அல்லது எப்படிச் சொன்னாலும் நன்மைகள் சமமாகவே வளங்கப்படுமா?

பதில் : ஸலாத்தின் முறைகள் வித்தியாசப்படும் போது நன்மைகளும் வித்தியாசப்படும். ஒருவர் அஸ்ஸலாமு அலைக்கும் என்று மட்டும் கூறினால், அவருக்கு பத்து நன்மைகள் கிடைக்கும். அத்துடன், வரஹ்மதுல்லாஹ்வை சேர்த்துக் கொண்டால் இருபது நன்மைகள் கிடைக்கும். வபரகாதுஹு என்ற வாசகத்தையும் சேர்த்துக் கொண்டால், முப்பது நன்மைகள் கிடைக்கும். என்று ஹதீஸில் வந்துள்ளது.

“நபி (ஸல்) அவர்களிடம், ஒரு மனிதர் வந்து, “அஸ்ஸலாமு அலைக்கும்” என்று கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், “பத்து” என்று கூறினார்கள். பிறகு மற்றுமொருவர் வந்து, “அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்” என்று கூறினார். அதற்கு நபியவர்கள், “இருபது” என்றார்கள். பிறகு இன்னொருவர் வந்து, “அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு” என்று கூறினார். அதற்கு நபியவர்கள், “முப்பது” என்று கூறினார்கள்.

(அபூதாவுத், திர்மிதி, நஸாஈ - ஸஹீஹ்)

கேள்வி 07 : ஸலாம் சொல்லக் கூடியவர்களிலும் வித்தியாசங்கள் உண்டா? உதாரணமாக சிறியவர்கள் பெரியவர்களுக்கு ஸலாம் சொல்வதா? அல்லது பெரியவர்கள் சிறியவர்களுக்கு ஸலாம் சொல்வதா? அதிகமானவர்கள் குறைந்தவர்களுக்கு ஸலாம் சொல்வதா?

குறைந்த எணணிக்கையுடையவர்கள் அதிக எண்ணிக்கையுடையவர்களுக்கு ஸலாம் சொல்வதா?

பதில் : வணக்க வழிபாடுகளை நாம் நினைத்தவாறு செய்ய முடியாது. அதற்கு, குர்ஆன் ஸுன்னாவிலிருந்து ஆதாரங்கள் தேவைப்படும். ஸலாம் என்பது வணக்க வழிபாடுகளில் முக்கியமான ஒன்று. இதையும் நாம் நினைத்தவாறு சொல்லவோ, செய்யவோ முடியாது. இந்த விடயத்திலும் அல்லாஹ்வின் வஹி, ஒரு வழிமுறையை காட்டித் தந்துள்ளது. சிறியவர்கள் பெரியவர்களுக்கும், வாகனத்திலிருப்பவர்கள் நடப்பவர்களுக்கும், நடப்பவர்கள் உட்கார்ந்திருப்பவருக்கும், குறைந்தவர்கள் அதிகமானவர்களுக்கும் ஸலாம் கூற வேண்டும்.

ஆனால் இந்த ஸுன்னாக்கள் அனைத்தும் குழி தோண்டி புதைக்கப்பட்டு, மக்களை விட்டும் முற்றாக மறைந்து விட்டன என்பது கவலைக்குரிய விடயமாகும்.

“நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், “வாகனத்திலுருப்பவர் நடப்பவர் மீதும், நடப்பவர் உட்கார்ந்திருப்பவர் மீதும், குறைந்த எண்ணிக்கையுடையவர்கள் அதிகமானவர்கள் மீதும், சிறியவர் பெரியவர் மீதும் ஸலாம் சொல்வார்.”

(புஹாரி, முஸ்லிம்)

கேள்வி 08 : ஒரு முஸ்லிமை பல முஸ்லிம்கள் ஒரே நேரத்தில் சந்திக்க நேர்ந்தால், அனைவரும் அவருக்கு ஸலாம் சொல்ல வேண்டுமா? அல்லது ஒருவர் மட்டும் ஸலாம் கூறினால் போதுமானதா?

பதில் : விரும்பினால் அனைவரும் ஸலாம் கூறலாம்.

“அப்துல்லாஹ் பின் ‘ஹீர் கூறுகிறார்கள், “நாங்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, அவர்களுக்கு ஸலாம் கூறினோம்.”

(அஹ்மத் - ஜய்யித், புலூகுல் அமானி பா : 19 பக் : 300)

மற்றுமொரு அறிவிப்பில்,

“இரண்டு பேர்கள் நபியவர்களை நோக்கி வந்து அவர்கள் முன்னால் நின்று, இருவரும் ஸலாம் சொன்னார்கள்.”

(முஅத்தா இமாம் மாலிகி, பாடம்: ஸலாம், அறிவிப்பாளர் தொடர் ஸஹீஹானது.)

விரும்பினால் ஒருவர் மட்டும் ஸலாம் கூறலாம். இருப்பவர்களில் ஒருவர் பதில் கூறினாலும் போதுமானதே.

“நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ஒரு கூட்டத்தார் நடந்து செல்லும்போது அவர்களில் ஒருவர் ஸலாம் சொன்னால் அது போதுமானதாகும். அமர்ந்திருப்பவர்களில் ஒருவர் பதில் கூறினாலும் அது போதுமானதாகும்.

(பைஹகி, பாடம்: ஈமான், அபூதாவுத், மிஷ்காத் பாகம்:03, பக்கம்: 1318)

கேள்வி 09 : பிள்ளைகள் விளையாட்டு வேடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது பெரியவர்கள் அவ்விடத்திற்குச் சென்றால், அவர்களுக்கு ஸலாம் சொல்ல வேண்டுமா?

பதில் : பெரியவர்கள் சிறியவர்களுக்கு அருகில் நடந்து செல்லும் போது, அவர்களுக்கு ஸலாம் கூற வேண்டும். அவர்கள் விளையாடிக்கொண்டிருந்தாலும் சரியே. நபி (ஸல்) அவர்கள், பிள்ளைகளுக்கு பக்கத்தால் நடந்து செல்லும் போது அவர்களுக்கு ஸலாம் கூறினார்கள்.”

(புஹாரி, முஸ்லிம்)

மற்றுமொரு அறிவிப்பில்,

“நான் பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டிருக்கும் போது, நபி (ஸல்) அவர்கள் அங்கு வந்து, எங்களுக்கு ஸலாம் கூறினார்கள்.” என்று அனஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

கேள்வி 10 : கிறிஸ்தவர்களும், அல்லாஹ்வையும் நபிமார்களையும் விசுவாசம் கொள்கிறார்கள். நாங்களும் சத்தியத்திலிருப்பதாக வாதிடுகிறார்கள்.ஸலாம் என்பது சாந்தி சமாதானத்தைக் குறிக்கக் கூடிய ஒரு காணிக்கையாக இருப்பதால், இவர்களுக்கும் நாம் ஸலாம் சொல்லலாமா? அவர்கள் எங்களுக்கு ஸலாம் கூறினால் பதில் சொல்லலாமா?

பதில் : ஸலாம் முஸ்லிம்களுக்குள் மட்டும் பரத்தப்பட வேண்டிய ஒரு அமலாகும். முஸ்லிம் அல்லாதவர்களுக்கு ஸலாம் சொல்வது தடை செய்யப்பட்டுள்ளது. எனவே யூத கிறிஸ்தவர்களுக்கு ஸலாம் கூறாதீர்கள். என்று நபி (ஸல்) அவர்கள் தடை செய்ததுடன், அவர்கள் ஸலாம் சொன்னால் “வஅலைக்கும்” என்று மட்டும் கூறுங்கள் என்று கூறியுள்ளார்கள்.

“நீங்கள் யூத கிறிஸ்தவர்களுக்கு ஸலாத்தை ஆரம்பிக்காதீர்கள்.” என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம் - எண்: 5626)

அவர்கள் ஸலாம் கூறினால் பதில் கூறும் முறையை கூறும் போது பின்வருமாரு கூறினார்கள்,

“வேதம் கொடுக்கப்பட்டவர்கள் உங்களுக்கு ஸலாம் சொன்னால் வஅலைக்கும் என்று (மட்டும்) கூறுங்கள்.” என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

(புஹாரி, முஸ்லிம் - 5618)

கேள்வி 11 : சிலர் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறுவதற்குப் பகரமாக “அஸ்ஸாமு அலைக்கும” (உங்கள் மீது மரணம் உண்டாகட்டும்) என்று கூறினால் அப்போதும் நாம் “வஅலைக்குமுஸ்ஸலாம்” என்று கூற வேண்டுமா?

பதில் : இல்லை. யாராவது அஸ்ஸாமு அலைக்கும் என்று நாவைப் புரட்டிக் கூறினால், அவர்களுக்கு ‘வஅலைக்கும்’ என்று மட்டுமே பதில் கூற வேண்டும். நாமும் அவர்கள் கூறியது போன்று அஸ்ஸாமு அலைக்கும் என்று கூறக் கூடாது.

“அன்னை ஆயி‘ா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள், யூதர்களில் சிலர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, “அஸ்ஸாமு அலைக்கும் السام عليكم அபுல் காஸிமே!” என்றனர். அதற்கு “வஅலைக்கும்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.”

(ஸஹீஹ் முஸ்லிம் - 5623)

கேள்வி 12 : ஒரு சபையில் முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதவர்களும் கலந்திருக்கும் இடத்திற்கு நாம் சென்றால், அவர்களுக்கு ஸலாம் சொல்லலாமா?

பதில் : முஸ்லிம்களுடன் எந்த மதத்தவர்கள் கலந்திருந்த போதிலும், நாம் முஸ்லிம்களைக் கண்டால் ஸலாம் கூறியே ஆக வேண்டும். அந்த ஸலாம் முஸ்லிம்களுக்குக் கூறியதாகவே கருதப்படும்.

யூதர்களும் சிலை வணங்கும் முஷ்ரிக்குகளும் முஸ்லிம்களும் கலந்திருந்த சபைக்கருகில் நடந்து சென்ற நபி (ஸல்) அவர்கள், அவர்களுக்கு ஸலாம் கூறினார்கள்.

(புஹாரி, முஸ்லிம்)

கேள்வி 13 : ஒருவர் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது அவருக்கு ஸலாம் கூறலாமா?

பதில் : ஆம். தொழுகையில் இருப்பவர்களுக்கு ஸலாம் கூறலாம். நபி (ஸல்) அவர்களுக்கு நபித் தோழர்கள் ஸலாம் கூறியுள்ளார்கள்.

அப்படி ஸலாம் கூறினால், தொழுகையிலிருப்பவர் ஸலாத்திற்குப் பதிலாக 'வஅலைக்குமுஸ்ஸலாம்' என்று கூறாது கையால் சைக்கினை மட்டுமே செய்ய வேண்டும்.

ஸைத் பின் அஸ்லம் கூறுகிறார்கள், "நபி (ஸல்) அவர்களுக்கு (தொழுகையில் இருக்கும் போது) ஸலாம் கூறினால் என்ன செய்வார்கள்?" என்று சுஹைபிடம் கேட்டேன். அதற்கு, "தங்கள் கையால் சைக்கினை செய்வார்கள்." என்று கூறினார்கள்.
(அஹமத், நஸாஈ - ஸஹீஹ்)

# தொழுகை

- தொடர் : 07 -

## பள்ளிவாயல்

01. பள்ளியினுள் நுழையும் போது அல்லாஹ்வின் தூதர் மீது ஸலாம் கூறி, பிறகு கீழ்வரும் துஆவை ஓத வேண்டும்.

## அல்லாஹும்ம அப்தஹ்லீ அபுவாப ரஹ்மதிக

யா அல்லாஹ்... எனக்காக உன் அருளின் வாயல்களைத் திறந்தருள்வாயாக...

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"உங்களில் ஒருவர் பள்ளிக்குள் நுழைந்தால், அவர் என்ற **அல்லாஹும்ம அப்தஹ்லீ அபுவாப ரஹ்மதிக** துஆவை ஓதிக் கொள்ளட்டும்."

(ஸஹீஹ் முஸ்லிம்)

"உங்களிலே ஒருவர் பள்ளிக்குள் நுழைந்தால், அவர் நபி (ஸல்) அவர்கள்மீது ஸலாம் கூறி, பிறகு (மேற் கூறப்பட்டதுஆவை) கூறவும்."

(அபூதாவூத் - ஸஹீஹ், ஜாமிஉஸ் ஸகீர்)

02. பள்ளியினுள் நுழையும் போது ஓத வேண்டிய மற்றுமொரு துஆ,

விரட்டப்பட்ட ஷைத்தானிலிருந்து மகத்தான அல்லாஹ்வைக் கொண்டு பாதுகாப்புத் தேடுகிறேன். சங்கைமிக்க அவனது திருமுகத்தைக் கொண்டும், பழமை மிக்க அவனது ஆட்சி, அதிகாரத்தைக் கொண்டும் பாதுகாப்புத் தேடுகின்றேன்.

(அல்முஸ்தத்ரக் ஹாகிம் - ஹதீஸ் எண் : 747)

குறிப்பு:

எவனொருவன் இந்த துஆவை ஓதுகின்றானோ, "இன்று எஞ்சியிருக்கக் கூடிய நாளில், இவன் என்னிலிருந்து பாதுகாக்கப்பட்டு விட்டான்."என ஷைத்தான் கூறுகின்றான்.
(அபூதாவூத் - ஸஹீஹ்)

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், பள்ளியினுள் நுழைந்தால்,

**அஊதுபில்லாஹில் அலீம் வபி வஜ்ஹிஹில் கரீம் வசுல்தானில் கதீம் மினஷ்ஷைதானிர்ரஜீம்**

என்ற துஆவைக் கூறக்கூடியவர்ளாக இருந்தார்கள்.

(அபூதாவூத் - ஸஹீஹ்)

03. பள்ளியினுள் நுழையும் போது முதலில் வலது காலை உள்ளே வைத்து நுழைய வேண்டும். பள்ளியிலிருந்து வெளியேறும் போது முதலில் இடது காலை வைத்து வெளியேற வேண்டும்.

“நீ பள்ளியினுள் நுழைந்தால், உனது வலது காலைக் கொண்டு ஆரம்பிப்பதும், (அதிலிருந்து) வெளியேரும் போது, உனது இடது காலைக் கொண்டு ஆரம்பிப்பதும் ஸுன்னத்தில் நின்றுமுள்ளதாகும்.” என அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

(ஹாகிம் - ஸஹ்ஹஹு தஹபி)

04. பள்ளியிலிருந்து வெளியேறும் போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மீது ஸலாம் கூறி, கீழ்வரும் துஆவை ஓதிக் கொள்ள வேண்டும்.

**அல்லாஹும்ம அ.்.ஸிம்னீ மினஷ்ஷைத்தானிர்ரஜீம்**

யா அல்லாஹ்... விரட்டப்பட்ட ஷைத்தானிலிருந்து என்னைப் பாதுகாத்தருள்.

**அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக மின் பத்லிக**

‘‘யா அல்லாஹ்... நிச்சயமாக நான் உன்னிடத்தில் உனது அருட்கொடையை வேண்டுகின்றேன்.’’

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"உங்களில் ஒருவர் (பள்ளியிலிருந்து) வெளியேறினால், **அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக மின் பத்லிக** என்ற துஆவை அவர் கூறிக் கொள்ளட்டும்."

(ஸஹீஹ் முஸ்லிம்)

"(பள்ளியிலிருந்து) வெளியேறினால், நபி (ஸல்) அவர்கள் மீதுஸலாம் கூறி, **அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக மின் பத்லிக** கொள்ளட்டும்."

(.முஸ்னத் அபீ அவானா - ஸஹீஹ்)

அல்லது பள்ளியிலிருந்து வெளியேறுகின்ற போது இந்த துஆவை ஓதிக் கொள்ள வேண்டும்.

**அல்லாஹும்ம அஃ.ஸிம்னீ மினஷ் ஷைத்தானிர் ரஜீம்**

யா அல்லாஹ்... விரட்டப்பட்ட ஷைத்தானிலிருந்து என்னைப் பாதுகாத்தருள்.

''பள்ளியிலிருந்து வெளியேறினால், நபி (ஸல்) அவர்கள் மீது ஸலாம் கூறி, **அல்லாஹும்ம அஃ.ஸிம்னீ மினஷ் ஷைத்தானிர் ரஜீம்** என்ற வார்த்தைகளைக் கூறிக் கொள்ளட்டும்''

(ஸஹீஹ் இப்னுமாஜா - ஹதீஸ் எண் : 627)

05. பள்ளியினுள் நுழைந்ததன் பிறகு உட்காருவதற்கு முன் இரு ரக்அத்துகள் தொழுது கொள்ள வேண்டும். மறதியின் காரணமாக

உட்கார்ந்ததன் பிறகு நினைவு வருமேயானால், உடனே எழுந்து இரண்டு ரக்அத்துகள் தொழுது கொள்ள வேண்டும்.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
“உங்களிலே ஒருவர் பள்ளிக்குள் நுழைந்தால், உட்காருவதற்கு முன் அவர் இரு ரக்அத்துகள் தொழுது கொள்ளட்டும்.”

(ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

“தொழுவதற்கு முன்னர் ஸுலைக் உட்கார்ந்து விட்டார். உடனே நபியவர்கள் அவரிடத்தில், “இரு ரக்அத்துகள் தொழுதாயா?” எனக் கேட்டார்கள். அதற்கு அவர், “இல்லை” என்றார். “உடனே எழுந்து அவ்விரண்டையும் தொழுது கொள்.” என்றார்கள்.”

(ஸஹீஹ் முஸ்லிம்)

06. இமாம் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும் நிலையில் வெள்ளிக் கிழமைத் தினத்தில் யாராவது ஒருவர் பள்ளிக்குள் நுழைந்தால் அப்போதும் அவர் இரு ரக்அத்துகள் தொழுது கொள்வது அவசியம். ஆனால் அதனை சுருக்கமாகத் தொழ வேண்டும்.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“இமாம் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும் நிலையில் வெள்ளிக் கிழமைத்தினத்தில் உங்களிலே ஒருவர் (பள்ளிக்கு) வந்தால், அவர் இரு ரக்அத்துகள் தொழுது கொள்ளட்டும். மேலும் அவர் அவ்விரண்டிலும் சுருக்கத்தைக் கடைபிடிக்கட்டும்.”

(ஸஹீஹ் முஸ்லிம்)

07. காணாமல் போன மிருகங்களை பள்ளியில் அறிவித்து தேடக் கூடாது. அப்படி யாராவது பள்ளியில் அறிவித்தல் செய்து அதனைத் தேடுவாரேயானால் அவரை முன்னோக்கி கீழ்வரும் வார்த்தைகளைக் கூற வேண்டும்.

**லா ரத்தஹால்லாஹு அலைக**

"அல்லாஹ் உங்களுக்கு அதனைத் திருப்பித் தராமல் இருக்கட்டும்."

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"யாராவது ஒரு மனிதர் தவறிப்போன மிருகங்களை பள்ளியில் அறிவித்தல் செய்து தேடுவதைச் செவிமடுத் தால், அவர் மேற்கூறப்பட்ட வார்த்தைகளைக் கூறட்டும்"

(ஸஹீஹ் முஸ்லிம்)

08. துர்நாற்றமிக்க உணவுப் பொருள்ளைச் சாப்பிட்டு விட்டு பள்ளிக்கு வரக் கூடாது.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"துர்நாற்றமிக்க இந்த மரத்திலிருந்து யார் சாப்பிடுகின் றாரோ, கண்டிப்பாக அவர் எங்கள் பள்ளியை நெருங்கக் கூடாது."

(ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

09. பள்ளியினுள் துப்பக் கூடாது. தற்செயலாக செப்பனிடப்படாத நிலத்தில் துப்பிவிட்டால், அதனை மண்ணினுள் புதைத்து விட வேண்டும்.

ரஸ்ூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"பள்ளியினுள் துப்புவது பாவமாகும். அதனைப் புதைத்து விடுவது அதற்கான பரிகாரமாகும்."

(ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

10. பள்ளியின் சுவரில் எச்சில் தென்படுமேயானால், அதனைச் சுரண்டிவிட்டு அந்த இடத்தில் நறுமணத்தைப் பூசி விட வேண்டும்.

“நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் பள்ளியின் சுவரில் சளி கலந்திருந்த எச்சிலைக் கண்டார்கள். உடனே ஒரு சிறியதொரு கல்லை எடுத்து அதனைச் சுரண்டி விட்டார்கள்.”

(ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

“வாசனையைக் கொண்டு வரும்படி வேண்டி (அந்த இடத்தில்) தேய்த்து விட்டார்கள்.”

(அஹ்மது, அபூதாவூத் - ஸனதுஹு ஸஹீஹ் )

11. தாங்கள் வசிக்கும் இடம், நகரங்கள் போன்றவற்றில் பள்ளிகள் நிறுவப்படல் வேண்டும். அவற்றைச் சுத்தமாகவும், தூய்மையாகவும் வைத்துக் கொள்வதோடு அவை நறுமணமிக்கதாக இருப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

“வீடுகளிருக்கக் கூடிய இடத்தில் பள்ளி அமைக்கும்படி அல்லாஹ்வின் தூதர் கட்டளையிட்டார்கள். மேலும் அதனை சுத்தமாகவும், வாசனை மிக்கதாகவும் வைத்துக் கொள்ளும்படியும் கட்டளையிட்டார்கள்.”

(அஹ்மது, அபூதாவூத்)

“அல்லாஹ்வின் தூதர் எங்களுக்கு அதனை (பள்ளியை) எங்கள் வீடுகள் இருக்கக் கூடிய இடத்தில் அமைக்கும்படியும், அதனைச் சிறப்பாக பரிபாலிக்கும்படியும் கட்டளையிடக் கூடியவர்களாக இருந்தார்கள்.”

(அபூதாவூத் - நைலுல் அவ்தார்)

12. பள்ளி மிகவும் சாதாரணமாக இருக்க வேண்டும்.

“பள்ளிகளை அலங்கரிக்கும்படி நான் ஏவப்படவில்லை.” என ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:”

(அபூதாவூத், இப்னுஹிப்பான்)

13. பள்ளியினுள் கவிதைகள் பாடக் கூடாது. கொடுக்கல் வாங்கலும் செய்யக் கூடாது.

“பள்ளியினுள் கவிதைகள் பாடப்படுவதையும், அதில் கொடுக்கல், வாங்கல் செய்வதையும் அல்லாஹ்வின் தூதர் தடை செய்தார்கள்.”

(அபூதாவூத், திர்மிதி - ஸஹ்ஹஹு இப்னு ஹிப்பான்)

14. யாராவது ஒருவர் பள்ளியினுள் கொடுக்கல், வாங்கல் செய்வதைக் கண்டால், அவர் கீழ்வரும் வார்த்தையைக் கூறட்டும்.

**லா அர்பஹல்லாஹு திஜாரதக**

“அல்லாஹ் உங்களது வியாபாரத்தில் இலாபத்தை வழங்காமல் இருக்கட்டும்,,.

“பள்ளியினுள் விற்பவரையோ அல்லது வாங்குபவரையோ நீங்கள் கண்டால், “அல்லாஹ் உங்கள் வியாபாரத்தில் இலாபத்தை வழங்காமல் இருக்கட்டும்.” என்ற மேற்கூறப்பட்ட வார்த்தைகளைக் கூறட்டும். என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறினார்கள்.”

(திர்மிதி, ஹாகிம் - ஸனதுஹு ஸஹீஹ்)

15. தொழுது கொண்டிருக்கும் போது முன்னால் துப்பவும் கூடாது. வலது பக்கம் துப்பவும் கூடாது. மாறாக, இடது பக்கம் துப்ப வேண்டும். நிபந்தனை - இடது பக்கம் எவரும் இருக்கக் கூடாது. அல்லது இடது காலின் கீழ் துப்பி, அதனை மண்ணினுள் பதைத்து விட வேண்டும்.

“உங்களிலே ஒருவர் தொழுகைக்காக எழுந்தால் தன் முன்னாலும் துப்பக் கூடாது........ தனது வலது புறமும் துப்பக் கூடாது......... தனது இடது புறம் துப்பட்டும். அல்லது தன் பாதத்தின் கீழ் துப்பி அதனைப் புதைத்து விடட்டும்.”

மற்றுமொரு அறிவிப்பில்,

"தனது இடது பாதத்தின் கீழ் துப்பட்டும்" என்றுள்ளது.

(ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

16. அப்படியில்லையென்றால், ஆடையில் துப்பி அதனைத் தேய்த்து விடட்டும்.

"பிறகு தன் ஆடையின் ஓரத்தைப் பிடித்து அதிலே துப்பி அதன்சில பகுதியை மற்ற பகுதியிலே தேய்த்து விட்டு அல்லது இப்படி செய்து கொள்வார் எனக் கூறினார்கள்."

(ஸஹீஹுல் புஹாரி)

17. எவரும் இல்லையென்றால் பின்னால் துப்ப முடியும்.

"உனக்குப் பின்னால் அல்லது உன் இடது புறத்தில் எவரும் இல்லையென்றால் துப்பிக் கொள்." என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(இப்னு குஸைமா - ஸனதுஹு ஸஹீஹ்)

18. பள்ளியினுள், ஒரு கையின் விரல்களை மற்ற கையின் விரல்களுக்குள் நுழைக்க வேண்டாம்.

"உங்களிலே ஒருவர் பள்ளியினுள் இருந்தால், நிச்சயம் அவர் விரல்களைக் கோர்க்க வேண்டாம்."

(அஹ்மது)

19. குளித்துக் கொள்ளாத வரை முழுக்காளியான எந்த ஆணோ, முழுக்காளியான எந்தப் பெண்ணோ, பள்ளியினுள் நுழையக் கூடாது. குளித்துக் கொள்ளாத வரை எந்த மாதவிடாய்ப் பெண்ணும் பள்ளியினுள் நுழையக் கூடாது.

“நிச்சயமாக நான் மாதவிடாய்ப் பெண்ணுக்கும், முழுக்காளிக்கும் பள்ளியை ஹலாலாக்க மாட்டேன்.”

(அபூதாவூத் - ஸஹ்ஹஹு இப்னு குஸைமா)

“பள்ளியிலிருந்து துணியை எடுத்துத் தாரும்.” என அல்லாஹ்வின் தூதர் எனக்குக் கூற, “நிச்சயமாக நான் மாதவிடாயுள்ளவளாக இருக்கின்றேன்.” எனக் கூறினேன். அதற்கவர்கள், “நிச்சயமாக உனது மாதவிடாய் உனது கையில் இல்லை.” எனக் கூறினார்கள்.” என ஆயிஷா (றழியல்லாஹுஅன்ஹா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

20. அதான் கூறப்பட்டதன் பிறகு தொழுகையை நிறைவேற்றாமல் பள்ளியிலிருந்து வெளியேறிச் செல்லக் கூடாது.

“அதான் கூறப்பட்டதன் பிறகு வெளியேறி, பள்ளியைக் கடந்து சென்ற ஒரு மனிதரைக் கண்ட அபூஹுரைரா (ரலி) அவர்கள், “அறிந்து கொள்ளுங்கள். நிச்சயமாக இவர் அபுல் காஸிம் (ஸல்) அவர்களுக்கு மாறு செய்து விட்டார்.” எனக் கூறினார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

ரஸுலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“நீங்கள் பள்ளியிலிருந்து, தொழுகைக்காக அதான் கூறப்பட்டு விட்டால், தொழும் வரை உங்களில் எவரும் வெளியேறிச் செல்ல வேண்டாம்.”

(ஸஹீஹ் முஸ்லிம்)

21. பள்ளியில் தனக்கென்று எந்தவொரு இடத்தையும் குறிப்பாக்கக் கூடாது.

“ஒரு மனிதர் பள்ளியில் ஓர் இடத்தைச் சொந்தமாக்கிக் கொள்வதை அல்லாஹ்வின் தூதர் தடை செய்தார்கள்.

(அபூதாவூத், நஸாஈ)

22. பள்ளியில் இருக்கும் போது எவருக்காவது தூக்கம் வந்தால் அவர் இடத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“பள்ளியில் இருக்கும் போது உங்களில் ஒருவருக்கு தூக்கம் வந்தால், அவர் தனது அந்த இருப்பிடத்திலிருந்து மற்றதின்பால் திரும்பிச் செல்லட்டும்.”

(அபூதாவூத், ஜாமிஉஸ் ஸகீர்)

23. பள்ளியில் பழிவாங்குவதோ, ஹத்துகளை நிறை வேற்றுவதோ கூடாது.

“பள்ளியில் பழி வாங்கப்படுவதையும், கவிதைகள் பாடப்படுவதையும், அதில் தண்டனைகள் நிறைவேற்றப் படுவதையும் நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் தடை செய்துள்ளார்கள்.”

(அஹ்மது, அபூதாவூத்)

24. வுழூச் செய்து பள்ளிக்குப் புறப்பட்டால் ஒரு கையின் விரல்களை மற்ற கையின் விரல்களுக்குள் போட வேண்டாம்.

“உங்களிலே ஒருவர் வுழூச் செய்து அதனை அழகாகவும் செய்து பள்ளியை நோக்கிப் புறப்பட்டு வந்தால், நிச்சயம் அவர் தன் விரல்களுக்கிடையில் கோர்க்க வேண்டாம். ஏனென்றால், நிச்சயம் அவர் தொழுகையில் இருக்கின்றார்.”

(அஹ்மது, அபூதாவூத் - ஸஹ்ஹஹு ஹாகிம்)

25. பள்ளியைப் பாதையாக ஆக்காதீர்கள்.

“(அல்லாஹ்வை ) ஞாபகம் கூறுவதற்கும்,
தொழுவதற்குமேத் தவிர, (ஏனைய விடயங்களுக்கு)
பள்ளிகளை (நடமாடும்) பாதைகளாக எடுத்துக்
கொள்ளாதீர்கள்.” (தபரானி கபீர்)

# பலதரப்பட்ட விடயங்கள்

01. குளியளறை, மண்ணறைகள் இருக்கும் இடங்களில் தொழக் கூடாது .

“மண்ணறைகள் இருக்கும் இடத்தையும்,
குளியளறையையும் தவிர பூமி முழுவதும் ஸுஜூது
செய்யும் இடமாகும் (தொழுமிடமாகும்).”

(அபூதாவூத், திரிமிதி)

02. கப்ரை முன்னோக்கித் தொழக் கூடாது.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்,
“கப்ருகளை நோக்கித் தொழாதீர்கள்.” (ஸஹீஹ் முஸ்லிம்)

03. அசிங்கங்கள், மிருகங்கள் அறுக்கப்படக் கூடிய இடங்கள், மற்றும் பாதைகள், ஒட்டகப் பட்டிகள், க.்.பாவின் கூரைப் போன்ற இடங்களில் தொழக் கூடாது.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“ஏழு இடங்கள் இருக்கின்றன. அவைகளிலே தொழுவது ஆகுமாகாது................” (இப்னுமாஜா)

04. பர்ழான தொழுகையைத் தவிர மற்றத் தொழுகைகளின் நன்மை, பள்ளியை ஒப்பிடுகையில் வீட்டில் அதிகமாகக் கிடைக்கின்றது. எனவே ஸுன்னத், நப்லான தொழுகைகளை வீட்டில் தொழுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“ஒரு மனிதர் தன் வீட்டில் கடமையான தொழுகைகளைத் தவிரவுள்ள தொழுகையைத் தொழுவது என்னுடைய இந்தப் பள்ளியில் அவர் தொழும் தொழுகையை விடச் சிறந்ததாகும்.”

(ஸஹீஹுல் புகாரி)

# இமாமத் செய்தல்

01. இமாம் மஃமூம்களை விட உயர்ந்த இடத்தில் நிற்கக் கூடாது.

“நிச்சயமாக ஹுதைபா மதாயின் என்ற இடத்தில், ஒரு கடையிலிருந்துகொண்டு மக்களுக்கு இமாமத் செய்தார்கள். அபூ மஸ்ஊத் (ரலி) அவர்கள் அவரைப் பிடித்து, “நிச்சயமாக அவர்கள் இதனை விட்டும் விலக்கப்படக் கூடியவர்களாக இருந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா?” எனக் கூறினார்கள்.”

(அபூதாவூத்)

02. அல்லாஹ்வுடைய வேதத்தை மிகவும் நன்றாக ஓதத் தெரிந்தவரே இமாமாக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் அனைவரும் சம அந்தஸ்துடையவர்களாக இருப்பின், அல்லாஹ்வின் தூதரின் வழி முறைகளை நன்கு அறிந்தவர் இமாமாக்கப்பட வேண்டும். இந்த விடயத்திலும் அனைவரும் சம அந்தஸ்தையுடையவர்களாக இருப்பின், எவர் ஆரம்பத்தில் ஹிஜ்ரத் செய்தவராக இருக்கின்றாரோ, அவர் இமாமாக்கப்பட வேண்டும். இதிலும் அனைவரும் சமமாக

இருப்பார்களேயானால், எவர் வயதில் மூத்தவராக இருக்கின்றாரோ, அவர் இமாமாக்கப்பட வேண்டும்.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“அவர்களில் அல்லாஹ்வுடைய வேதத்தை மிகவும் நன்கு ஓதக்கூடியவர் கூட்டத்திற்குத் தொழுகை நடாத்தட்டும். கிராஅத் விடயத்தில் அனைவரும் சம அந்தஸ்துடையவர்களாக இருப்பின், அவர்களில் ஸூன்னாவை நன்கு அறிந்திருப்பவர் இமாமத் செய்யட்டும். ஸூன்னா விடயத்திலும் அவர்கள் அனைவரும் சமாமாக இருப்பின், அவர்களில் முதன்மையாக ஹிஜ்ரத் செய்தவர் இமாமத் செய்யட்டும். ஹிஜ்ரத் விடயத்திலும் அவர்கள் அனைவரும் சமமாக இருப்பின், வயதால் அவர்களில் மூத்தவராக இருப்பவர் இமாமத் செய்யட்டும்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

03. மற்றவருடைய அதிகாரத்திற்குட்பட்ட இடம் அல்லது மற்றவர்களின் வீடு போன்ற இடங்களில் அனுமதியின்றி எவரும் இமாமத் செய்யக் கூடாது.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“ஒரு மனிதருடைய (வீட்டில்) குடும்பத்திலோ, அவரின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களிலோ அவரின் அனுமதியைக் கொண்டேத் தவிர, நிச்சயமாக நீ இமாமத் செய்ய வேண்டாம்.”

(ஸஹீஹ் முஸ்லிம்)

04. கூட்டமைப்பாக இருக்கும் மக்கள் எவர் இமாமத் செய்வதை வெறுக்கின்றார்களோ, அத்தகையோர் மக்களுக்கு தொழுவிக்கக் கூடாது.

“மூன்று பேர்கள் இருக்கின்றார்கள். அவர்களின் தொழுகை அவர்களின் தலைகளுக்கு மேல் ஒரு சாணளவேனும் உயராது. ஒரு மனிதர் ஒரு கூட்டத்திற்கு தொழுகை நடாத்துகின்றார். அவர்களோ அவரை வெறுககின்றார்கள்.”

(இப்னுமாஜா)

05. இமாம் தொழுகையை நீட்டக் கூடாது. மாறாக, சுருக்கிக் கொள்ள வேண்டும். இமாமத் செய்யும் போது மிகவும் பலயீனமானவரைக் கருத்திற் கொண்டு இமாமத் செய்ய வேண்டும்.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"உங்களிலே ஒருவர் மக்களுக்கு தொழுகை நடாத்தினால் அவர் சுருக்கிக் கொள்ளட்டும்."
(ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

"அவர்களில் மிகவும் பலயீனமானவர்களைக் கருத்திற் கொள்."
(அஹ்மது)

06. ஒரு கூட்டத்தைச் சந்திக்கச் சென்றால், சந்திக்கச் செல்பவர் அவர்களுக்குத் தொழுகை நடாத்தக் கூடாது. அவர்களிலுள்ள ஒருவரே அவர்களுக்கு தொழுகை நடாத்தட்டும்.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்,

"உங்களிலே ஒருவர் ஒரு கூட்டத்தைச் சந்திக்கச் சென்றால், அவர் அவர்களுக்குத் தொழுகை நடாத்த வேண்டாம். அவர்களிலுள்ள ஒரு மனிதரே அவர்களுக்கு தொழுகை நடாத்தட்டும்.''

(முஸ்னத் அஹ்மத்)

07. எந்தப் பெண்ணாவது ஜமாஅத் தொழுகையில் இணைந்து தொழுது கொண்டிருக்கும் போது அவளின் குழந்தையின் அழும் ஓசையைச் செவிமடுத்தால், தொழுகையைச் சுருக்கிக் கொள்வதோடு கிராஅத்தையும் சுருக்கிக் கொள்ள வேண்டும்.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“நிச்சயமாக தொழுகையில் நின்று அதனை நீட்ட வேண்டுமென நாடுகின்றேன். குழந்தையின் அழுகையைச் செவிமடுத்து அதனது தாய்க்குச் சிரமத்தை ஏற்படுத்தி விடுவேனோ என்ற வெறுப்பின் பொருட்டு எனது தொழுகையைச் சுருக்கிக் கொள்கின்றேன்.”

(ஸஹீஹுல் புகாரி)

“அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், தொழுகையில்இருக்கும் போது தன் தாயுடன் இருக்கக் கூடிய குழந்தையின் அழுகையைச் செவிமடுத்து உடனே சிறியதோர் சூராவை ஓதக் கூடியவர்களாக இருந்தார்கள்.”

(ஸஹீஹ் முஸ்லிம்)

08. இகாமத் கூறப்பட்டதன் பிறகு ம.்.மூம்களை முன்னோக்கி ஸப்புகளை நேராக வைத்துக் கொள்வதற்கான வழிகாட்டலை வழங்குவது இமாமின் மீது அவசியமாகும்.

“தொழுகைக்காக இகாமத் சொல்லப்பட்டது. அல்லாஹ்வின் தூதர் எங்களை முன்னோக்கி வந்து, “உங் கள் ஸப்புகளை நேராகவும் நெருக்கமாகவும் வைத்துக் கொள்ளுங்கள். எனக் கூறினார்கள்.” என அனஸ் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்.

(ஸஹீஹுல் புகாரி)

09. இமாம் ஸப்புகளில், ஒரு புறத்திலிருந்து மற்ற புறத்திற்குச் சென்று மக்களின் தோள்களிலும், நெஞ்சுகளின் மீதும் கையை வைத்து ஸப்புகளை சரி செய்வது அவசியம்.

“அல்லாஹ்வின் தூதர் தொழுகையின் போது எங்கள் தோள்களைத் தடவி “சமமாக இருங்கள்.” எனக் கூறக் கூடியவர்களாக இருந்தார்கள்.” என அபூமஸ்ஊத் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

“அல்லாஹ்வின் தூதர் ந அவர்கள் ஸப்புகளுக்கிடையில் ஒரு புறத்திலிருந்து மறுபுறம் சென்று எங்களது தோள்களையும், நெஞ்சுகளையும் தடவி சரி செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள்.”

(அபூதாவூத், நஸாஈ)

10. தொழுகை நடாத்தும் இமாமின் சத்தம் கேட்கவில்லையென்றால், யாராவது ஒருவர் உரத்த குரலில் ‘அல்லாஹு அக்பர்’ என்று கூறட்டும்.

“நபி (ஸல்) (அவர்கள், மக்களுக்கு தொழுகை நடாத்த, அபூபக்கர் (ரலி) அவர்களோ, ‘அல்லாஹு அக்பர்’ என்று கூறி அதை அவர்களுக்குச் செவியுறச் செய்து கொண்டிருந்தார்கள்.”

(ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

11. கிப்லாவின் பக்கம் துப்பியவர் இமாமாக்கப்படக் கூடாது.

“நிச்சயமாக ஒரு மனிதர் ஒரு கூட்டத்திற்கு தொழுகை நடாத்தினார். (அப்போது அவர்) கிப்லாவில் துப்பி விட்டார்........... அதற்கு அல்லாஹ்வின் தூதர், “இவர் உங்களுக்கு தொழுகை நடாத்தக் கூடாது.” எனக் கூறினார்கள்.”

(அபூதாவூத், தபரானி - ஸஹீஹ்)

12. பருவமடையாத சிறுவன், அனைவரையும் விட அல்குர்ஆனை ஓதக் கூடியவனாக இருப்பின், அவனே இமாமாக ஆக்கப்பட வேண்டும்.

அம்ர் இப்னு ஸலமா (ரழி) அவர்கள் கூறினார்கள், “அல் குர்ஆனை ஓதத் தெரிந்தவர் என்னை விட எவரும் இருக்கவில்லை.

அவர்கள் ஆறு அல்லது ஏழு வயதுடைய என்னை அவர்களுக்கு மத்தியில் முற்படுத்தினர்.”

( ஸஹீஹுல் புஹாரி )

13. அல்லாஹ்வுடைய வேதத்தை அனைவரையும் விட ஓர் அடிமை ஓதத் தெரிந்தவராக இருப்பின், அவரே இமாமாக்கப்பட வேண்டும்.

“ஆரம்பத்தில் ஹிஜ்ரத் செய்து வந்தவர்கள் மதீனாவிற்கு வந்த போது அபூ ஹுதைபாவின் அடிமையான ஸாலிம், அவர்களுக்கு தொழுகை நடாத்திக் கொண்டிருந்தார். அவர் அவர்களில் அல்குர்ஆனை நன்கு ஓதத் தெரிந்தவராக இருந்தார்.”

(ஸஹீஹுல் புகாரி)

14. எவர் கடமையான தொழுகையை தொழுது விட்டாரோ, அவர் மற்றவர்களுக்கு அந்த கடமையான தொழுகையை தொழுவிக்க முடியும். இமாமின் இந்தத் தொழுகை நபிலாக மாறி விடும்.

“முஆத் அவர்கள், ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடன் தொழுது விட்டுப் பிறகு தன் சமூகத்திடம் சென்று, அவர்களுக்குத் தொழுகை நடாத்தக் கூடியவர்களாக இருந்தார்கள்.”

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

“அவர் அவர்களுக்கு தொழுகை நடாத்துவார். அது அவருக்கு நபிலாகி விடும்.”

(முஸன்னப் அப்துர் ரஸ்ஸாக்)

15. அந்தகரும் இமாமாக நியமிக்கப்பட முடியும்.

“அந்தகாரான இப்னு உம்மி மக்தூமை மக்களுக்குத் தொழுகை நடாத்தும்படி அல்லாஹ்வின் தூதர் (ஸல்) நியமித்தார்கள்.”

(அபூதாவூத்)

16. ஏதாவது நிர்ப்பந்தத்தின் காரணமாக இமாம் உட்கார்ந்து தொழுதால், ம.்.மூம்களும் உட்கார்ந்து தொழ வேண்டும்.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
“அவர் உட்கார்ந்து தொழுதால், நீங்களும் உட்கார்ந்து தொழுங்கள்.”
(ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

17. மக்களுக்கு அவர்கள் அனுமதி தராதவரை எவரும் இமாமத் செய்ய வேண்டாம்.

“அல்லாஹ்வையும் இறுதிநாளையும் விசுவாசம் காண்டிருக்கின்ற எந்தவொரு மனிதருக்கும், எந்தவொரு கூட்டத்திற்கும் அவர்களின் அனுமதியைக் கொண்டேத் தவிர தொழுகை நடாத்துவது ஆகுமாகாது.”

(அபூதாவூத்)

18. இமாம் கடமையான தொழுகைக்காக ஸலாம் கொடுத்ததன் பிறகு கிப்லாவின் பக்கம் முன்னோக்கி, கீழ்வரும் துஆவை ஓதக் கூடிய நேரமளவு அந்த இடத்தில் உட்கார்ந்திருக்க வேண்டும்.

**அல்லாஹூம்ம அன்தஸ்ஸலாமு வமின்கஸ் ஸலாமு தபாரக்த யாதல் ஜலாலி வல் இக்ராம்**

“அல்லாஹ்வின் தூதர் ஸலாம் கொடுத்தால், **அல்லாஹூம்ம அன்தஸ்ஸலாமு வமின்கஸ் ஸலாமு தபாரக்த யாதல் ஜலாலி வல் இக்ராம்** என்ற துஆவை ஓதக் கூடிய அளவுக்கே தவிர உட்கார மாட்டார்கள்.”
(ஸஹீஹ் முஸ்லிம்)

# ஸஹீஹான ஹதீஸ் ஒன்று

“ஒரு மனிதர் நின்ற வண்ணம் பாதணி அணிவதை நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள்.” என்று ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(ஸஹீஹ், அல் அஹாதீதுஸ் ஸஹீஹா, எண் :719)

# மவ்ழூ.ஃ.வான ஹதீஸ் ஒன்று

“யார் சிரித்தவராக ஒரு பாவத்தை செய்கிறாரோ, அவர் அழுதவராக நரகம் நுழைவார்.” என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இட்டுக்கட்டியுள்ளார்கள்.

(அபூ நயீம்)

இது மவ்லூஆன இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகும். இதன் அறிவிப்பாளர் தொடரில், முஹம்திப்னு ஸியாத் அல் யஸ்கரி இடம் பெறுகிறார். இவர் பொய்யர் என அஹமத் கூறுகிறார். இப்னு மயீன், தாரகுத்னி, அபூ ஸரஆ இம்மூவரும் இவரை பொய்யர் என்கின்றனர்.

எனவே இது இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகும்.

(அல் அஹாதீதுல் லயீபா வல் மவ்லூஆ - 17)

# லயீபான ஹதீஸ் ஒன்று

“நிச்சயமாக நான் ஒரு ஆசிரியராக அனுப்பப் பட்டுள்ளேன்.” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்களாம்.

இது மனிதர்களின் நாவுகளில் மிகவும் பிரபல்யமாக பேசப்பட்டாலும் இது பலயீனமான செய்தியாகும்.

காரணம் இதன் அறிவிப்பாளர் தொடரில், அப்துர் ரஹ்மான் பின் ஸியாத் என்பவரும், இப்னு ராபீ஀. என்பவரும் இடம் பெறுகிறார்கள். இவ்விருவரும் பலயீனமானவர்கள் என்று இப்னு ஹஜர் தக்ரீபுத் தஹ்தீப் என்ற நூலில் கூறுகிறார்.

இமாம் இறாக்கியும் இது பலயீனமானது என்று தக்ளீஜுல் இஹ்யாலில் கூறியுள்ளார்.

(அல் லயீபா வல் மவ்லூஆ எண் - 11)

# வாரிசுரிமை

27. மரணித்தவருக்கு ஒரு மகளும் மகனின் மகளொருத்தியும் ஒரு சகோதரியும் இருப்பின் மகளுக்கு சொத்தில் பாதியும் ($^1/_2$ ), மகனின் மகளுக்கு ஆறில் ஒன்றும் மிகுதியை சகோதரிக்கும் கொடுக்கப்படும்.

(ஒரு பிரச்சினையில்) நபி ﷺ அவர்கள் “மகளுக்கு இரண்டில் ஒரு பங்கும், மகனின் மகளுக்கு ஆறில் ஒன்றும் மிகுதியை சகோதரிக்கும்” என்றுத் தீர்ப்பு வழங்கினார்கள். (ஸஹீஹுல் புகாரி)

28. மரணித்தவருக்கு ஒரு மகளும் ஒரு சகோதரியும் இருந்தால், அவரின் சொத்தை இரண்டாகப் பிரித்து சமமாகக் கொடுக்கப்படும்.

நிச்சயமாக முஆத் பின் ஜபல் ؓ யெமனிலிருக்கும்போது ஒரு மகளையும் ஒரு சகோதரியையும் சொத்துக்கு உரிமையாளர் களாக்கி ஒவ்வொருவருக்கும் சொத்தில் பாதி, பாதி கொடுத்தார்கள். அப்போது நபி ﷺ அவர்கள் உயிரோடிருந்தார்கள். (அபூதாவூத்)

29. மரணித்தவருக்கு தாயில்லாது, தாயின் தாயோ, அல்லது தந்தையின் தாயோ உயிரோடிருந்தால் அவர்களுக்கு ஆறில் ஒரு பங்கு கொடுத்துவிட்டு, மிகுதியை மற்றவர்களுக்குப் பங்கிட வேண்டும்.

நபி ﷺ அவர்கள் பாட்டிக்கு ஆறில் ஒன்றைக் கொடுத்தார்கள். அவர்களுடன் தாயிருக்கவில்லை.

(அபூதாவூத், அந்நஸாஈ - ஸனதுஹு ஸஹீஹ், நைலுல் அவ்தார் )

**மற்றுமொரு அறிவிப்பில் :**

நபி ﷺ அவர்கள் அவளுக்கு (பாட்டிக்கு) ஆறில் ஒன்றைக் கொடுத்தார்கள். ( அபூதாவூத், திர்மிதி )

.30. ஒருவர் மரணிக்கும்போது அவரின் தந்தை ஏற்கனவே மரணித்து, அவரின் தந்தையின் தந்தை உயிரோடிருந்தால், பேரனின் சொத்திலிருந்து அப்பாவுக்கு ஆறில் ஒன்று கொடுக்கப்படும்.

நிச்சயமாக ஒரு மனிதர் நபி ﷺ அவர்களிடம் வந்து "எனது மகனின் மகன் இறந்துவிட்டார். அவரின் சொத்தில் என்ன கிடைக்கும்?" என்று கேட்டார். "உமக்கு ஆறில் ஒன்று" என்று கூறினார்கள்.
(அஹ்மத், அபூதாவூத், திர்மிதி - ஸஹீஹ் என்ற தரத்திலுள்ளது என்கின்றார் திர்மிதி)

31. மரணித்தவருக்கு வாரிசுகள் யாருமில்லாது மாமா (தாயின் சகோதரன்) மட்டும் இருந்தால், அவரே அனைத்து சொத்துக்கும் வாரிசாவார்.

"எவருக்கு வாரிசு இல்லையோ, அவருக்கு மாாம (தாயின் சகோதரர்) வாரிசாவார்." (அஹ்மத், அபூதாவூத் - நைலுல் அவ்தார் )

32. ஒருவருக்கு ஒரு நன்கொடையை வழங்கி, வழங்கப்பட்டவர் மரணித்து, அவருக்கு நன்கொடை வழங்கியவரைத் தவிர வேறு யாரும் வாரிசுகள் இல்லையெனில் இந்நன்கொடை வழங்கியவருக்கே மீண்டுவிடும்.

ஒரு பெண் நபி ﷺ அவர்களிடம் வந்து, “அல்லாஹ்வின் தூதரே! நிச்சயமாக நான் என் தாய்க்கு ஒரு அடிமையை தர்மமாகக் கொடுத்திருந்தேன். நிச்சயமாக அவர்கள் இப்போது மரணித்துவிட்டார்கள்” என்றார். அதற்கு நபி ﷺ அவர்கள் “உனக்குக் கூலி கிடைத்துவிட்டது. அவளை உனது சொத்துரிமை. உனக்கே மீட்டி தந்துவிட்டது” என்றார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

# மரணித்தவர்களுக்கு தர்மம் கொடுத்தல்

01. மரணித்தவர்கள் பெயரால் தர்மங்கள் செய்து அதன் நன்மைகளை அவர்களுக்குச் சேர்த்து வைக்கலாம்.

ஒரு மனிதர் நபி ﷺ அவர்களிடம் வந்து “நிச்சயமாக என் தந்தை மரணித்து விட்டார். பொருள்களையும் விட்டுச் சென்றுள்ளார். எவ்வித வஸிய்யத்தும் செய்யவில்லை. நான் அவருக்காக ஸதகா கொடுத்தால் அவரின் குற்றங்கள் மன்னிக்கப்படுமா?” என்றார். அதற்கு நபி ﷺ அவர்கள் “ஆம்” என்றார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

ஸஃத் பின் உபாதா ﵁ என்ற நபித்தோழர் நபி ﷺ அவர்களிடம் வந்து, “அல்லாஹ்வின் தூதரே! நானில்லாத வேளை, என் தாய் இறந்து விட்டார். அவர் பெயரால் நான் ஏதும் ஸதகா கொடுத்தால், அது அவர்களுக்குப் பயனளிக்குமா?” என்று கேட்டார். அதற்கு “ஆம்” என்றார்கள். அப்போது என்னுடைய “அல்மிக்றாப்” என்ற இந்தத் தோட்டத்தை உங்களை சாட்சியாக வைத்து அவர்கள் பெயரால் ஸதகாவாகக் கொடுக்கின்றேன்” என்றார்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

நபி ﷺ அவர்கள் குர்பானி கொடுக்க நினைத்தால், இரு ஆடுகளை வாங்குவார்கள். தொழுது குத்பாப் பிரசங்கம் முடிந்ததும், ஒன்றைக் கொண்டு வந்து அறுப்பார்கள். பிறகு “இது எனது (முஸ்லிமான) முழு உம்மத்திற்காகவும்” என்று கூறுவார்கள்.

(அஹ்மத் - ஸனதுஹு ஸஹீஹ்)

நபி ﷺ அவர்கள் ஓர் ஆட்டைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டு, அதை கீழே படுக்க வைத்து, “பிஸ்மில்லாஹ், முஹம்மதிலிருந்தும் முஹம்மதின் கிளையாரிலிருந்தும், முஹம்மதின் உம்மத்திலிருந்தும் இதை ஏற்றுக் கொள்வாயாக!” எனக் கூறி அறுத்தார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

02. ஒருவர் நேர்ச்சைகள் வைத்த நிலையில் அதை நிறைவேற்றாது மரணித்துவிட்டால், உயிரோடுள்ளவர்கள் அதை நிறைவேற்ற வேண்டும்.

நிச்சயமாக ஸஃத் என்ற நபித் தோழர் நபி ﷺ அவர்களிடம் வந்து தன்னிடம் தாய்க்கு ஒரு நேர்ச்சை இருக்கிறது. அதை நிறைவேற்ற முன் அவர்கள் வபாத்தாகிவிட்டார்கள். இது சம்பந்தமாகத் தீர்ப்பு வழங்கும்படி

வேண்டினார்கள். அதற்கு, அதை நிறைவேற்றும்படி தீர்ப்பு வழங்கினார்கள். (ஸஹீஹுல் புகாரி, முஸ்லிம்)

03. ஒருவர் தான் ஹஜ் செய்வதாக நேர்ச்சை செய்துவிட்டு, அதைச் செய்ய முன் வபாத்தாகி விட்டால், உயிரோடுள்ள அவரின் உறவினர்கள் அதை நிறைவேற்ற வேண்டும்.

ஒரு மனிதர் நபி ﷺ அவர்களிடம் வந்து "நிச்சயமாக என் சகோதரி ஹஜ் செய்வதாக நேர்ச்சை வைத்திருந்தாள். அதை நிறை வேற்ற முன் அவள் வபாத்தாகி விட்டாள்" என்றார். அதற்கு நபி ﷺ அவர்கள் "அவளுக்குக் கடனிருந்தால் அதை நிறைவேற்றுவாயா?" என்று கேட்க, அவர் "ஆம்" என்றார். உடனே, "அல்லாஹ்வின் கடனை நிறைவேற்று. ஏனென்றால் (கடன்) நிறைவேற்றப்படுவதில், அல்லாஹ்வே மிகத் தகுதியானவன்" என்றார்கள். (ஸஹீஹுல் புகாரி)

04. ஒருவர் நோன்பு நோற்பதாக நேர்ச்சை வைத்த நிலையில் மரணித்து விட்டால், அவருக்காக அவரது உறவினர்கள் அந்நோன்பை நோற்க வேண்டும்.

நபி ﷺ அவர்களிடம் ஒரு பெண்மணி வந்து "அல்லாஹ்வின் தூதரே! என் தாய் மரணித்து விட்டார். அவர் நோற்க வேண்டிய சில நோன்புகள் இருக்கின்றன. அவைகளை நான் அவருக்காக நோற்க முடியுமா?" என்று கேட்டார். அதற்கு நபி ﷺ அவர்கள் "உன் தாய் கடனாளியாய் இருந்து, அதை நீ கொடுத்தால் அது நிறைவேறுமா?" என்று கேட்டார்கள். அவர் "ஆம்" என்றார். "அப்படியா னால் உன் தாயின் பெயரால் அந்த நோன்பை நோற்றிடு" என்றார்கள். (ஸஹீஹுல் புகாரி)

"யாருக்காவது கடமையான நோன்பிருக்க, அவர் மரணித்து விட்டால், அவரின் பொறுப்பாளி (வலி) நிறைவேற்றுவார்" என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

05. ஒருவர் ஹஜ் செய்யாது வபாத்தாகி விட்டால், அவருக்காக ஹஜ் செய்யலாம்.

ஒரு பெண்மணி நபி ﷺ அவர்களிடம் வந்து “நிச்சயமாக அவர் (என் தாய்) அறவே ஹஜ் செய்யவில்லை. நான் அவருக்காக ஹஜ் செய்ய முடியுமா?” என்று கேட்டாள். அதற்கு “அவருக்காக ஹஜ் செய்” என்றார்கள். (முஸ்லிம்)

06. மரணித்தவர்களுக்கு நன்மை கிடைப்பதற்காக அடிமைகளை அவர்கள் பெயரால் உரிமையிடலாம்

(இறந்தவர்) முஸ்லிமாக இருந்து அவர் பெயரால் நீங்கள் அடிமைகளை உரிமையிட்டால் அதன் நன்மை அவரை அடையும்

என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.

(அபூதாவூத், ஸனத் ஸஹீஹ் நைல் 6/36 )

# கப்ருடைய வேதனையும் நிம்மதியும்

01. ஒருவர் இறந்து அவரை அடக்கம் செய்யப்பட்டதும் அவருக்குக் கப்ரில் கேள்வி கேட்கப்படும். கேள்வி கேட்பவர்கள் இரண்டு மலக்குகள். ஒருவர் முன்கர் மற்றவர் நகீர். இருவரும் கறுப்பு நிறமுடையவர்களாகவும் இரு கண்களும் நீலம் பூத்தவர்களாகவும் இருப்பர்.

மையித்து அடக்கம் செய்யப்பட்டதும் அவரிடம் கறுப்பு நிறமுடைய நீல நிற (கண்களையுடைய) இரு வானவர்கள் வந்து விடுவார் கள். அவர்களில் ஒருவருக்கு "அல் முன்கர்" என்றும் மற்றவருக்கு "அந்நகீர்" என்றும் கூறப்படும்.

(திர்மிதி- ஸனத் ஹஸன்)

02. அவ்விருவரும் "உனது ரப்பு யார்?" என்று கேட்பார்கள். மரணித்தவர் விசுவாசியாக இருந்தால் "எனது ரப்பு அல்லாஹ்" என்று கூறுவார்.

"உனது ரப்பு யார்?" என்று கேட்கப்படும். அதற்கு அவர் "என் ரப்பு அல்லாஹ்" என்பார். (புஹாரி, முஸ்லிம்)

03. பிறகு முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பற்றி என்ன கூறுகிறாய்? என்று கேட்பார்கள். அதற்கு அவர், ஒரு விசுவாசியாக இருந்தால் "நிச்சயமாக அவர் அல்லாஹ்வின் அடிமை என்றும் அவனின் தூதர் என்றும் நான் சாட்சி கூறுகின்றேன்." என்பார்.

உண்மை விசுவாசி, "அவர் அல்லாஹ்வினடியார் என்றும் அவனின் தூதரென்றும் நான் சாட்சி கூறுகின்றேன்." என்பார்.
(புஹாரி, முஸ்லிம்)

04. கேள்வி கேட்கப்படுபவர் முனாபிக் அல்லது காபிராக இருந்தால், கேட்கப்படும் கேள்விக்கு "எனக்குத் தெரியாது" என பதிலளிப்பார்.

முனாபிக்காகவோ அல்லது காபிராகவோ இருந்தால் "எனக்குத் தெரியாது." எனக் கூறுவார். என நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.
(புஹாரி, முஸ்லிம்)

05. ஒரு விசுவாசியின் "ரூஹ்" மீண்டும் அந்த உடலுக்குள் மீட்டப்படும். அப்போது இரண்டு மலக்குகள் வந்து கேள்வி கேட்பர். பின்பு அவரின் கப்ர் 70 முழம் விசாலமாக்கப்படும். கப்ரில் பிரகாசம் கொடுக்கப்படும். சுவனத்தின் ஆடைகள் அவருக்காக விரிக்கப்படும்.

அவரின் 'ரூஹ்' அவரின் உடலுக்குள் மீட்டப்படும். அவரிடம் இரண்டு மலக்குகள் வருவார்கள். (அஹ்மத்- ஸனத் ஸஹீஹ்)

பிறகு அவரின் மண்ணறை 70 முழத்துக்கு விஸ்தீரணமாக் கப்படும். அவருக்காக அதில் ஒளியேற்றப்படும். (திர்மிதி- ஸனத் ஹஸன்)

அவருக்காக அதிலே அவரின் பார்வை எட்டும் அளவு திறந்து விடப்படும். ( அபூதாவூத் )

06. கேள்வி கேட்டு முடிந்ததும் விசுவாசியைப் பார்த்து “மறுமையில் அல்லாஹ் உன்னை எழுப்பும் வரை தூங்கு” என்று கூறுவார்கள்.

அல்லாஹ் அவரை அவரின் படுக்கையிலிருந்து எழுப்பும் வரை (தூங்கவும்) எனக் கூறுவார்கள். (திர்மிதி)

07. மனிதன் படைக்கப்பட்டதும் இப்பூமியிலிருந்தே. அவன் அடக்கப்ப டுவதும் அதிலேயே. மீண்டுமவன் எழுப்பப்படுவதும் இதிலிருந்தே.

பூமியிலிருந்து நாம் உங்களை சிருஷ்டித்தோம். பின்னர் அதிலேயே நாம் உங்களைச் சேர்த்து விடுவோம். மற்றொரு தடவையும் அதிலிருந்தே நாம் உங்களை வெளிப்படுத்துவோம்.
(ஸூரா தாஹா : 55)

08. பாவிகளுக்கு கப்ரில் நிச்சயமாக வேதனை நடக்கும். எனவே ஒவ்வொருவரும் தன்னை பாவத்திலிருந்து பாதுகாத்து உண்மை முஸ்லிமாக மரணிக்க வேண்டும்.

நீங்கள் மரணித்தவர்களை அடக்காமல் விட்டுவிடுவீர்கள் என்ற அச்சம் இல்லாதிருப்பின் மண்ணறையில் நடக்கும் வேதனையை உங்களுக்குக் கேட்கச் செய்ய நான் அல்லாஹ்விடம் வேண்டி யிருப்பேன். என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

09. பாவிகளின் வேதனை இடையில் நிறுத்தப்பட மாட்டாது. தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். அல்லாஹ் நம்மை அதிலிருந்து பாதுகாப்பானாக!

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் “பூமியே அவனை நெருக்கு” என்று கூறப்படும். அது அவனை நெருக்கும். அவனின் எலும்புகள் ஒன்றோடொன்று பின்னிக்கொள்ளும். அவனின் இடத்திலிருந்து அல்லாஹ் அவனை எழுப்பும் வரை இப்படியே வேதனை செய்யப்பட்டுக் கொண்டேயிருப்பான். (திர்மிதி - ஸனதுஹூ ஹஸன்)

◈ ‘ஸூர்’ ஊதப்படுவதற்குச் சற்று முன் வேதனை நிறுத்தப்படும் என்பதை ஸூரா யாஸீன் பின்வருமாரு கூறுகிறது.

“மேலும் ஸூர் ஊதப்பட்டால் உடனே அவர்கள் கல்லறை களில் இருந்து (வெளியேறி) தங்கள் ரப்பிடம் விரைந்து செல்வார்கள். “எங்களுக்கு அழிவுதான். (தங்கள்) தூங்குமிடங்களில் இருந்து எங்களை யார் எழுப்பியது?” என்று கேட்பார்கள். இது அளவற்ற அருளாளனின் வாக்குறுதியாகும். தூதர்கள் உண்மையே கூறினார்கள் (என்றும் அவர்களுக்குக் கூறப்படும்)

(ஸூரா யாஸீன் : 36 - 52)

◈ வேதனை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தால், “எங்கள் தூங்குமிடத்திலிருந்து எங்களை எழுப்பியது யார்?” என்று கேட்க மாட்டார்கள்.